**கம்பஹா பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2019 யூலை 15 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 செப்டம்பர் 16 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கம்பஹா பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | மீளாய்வாண்டினது நிதிக்கூற்றுக்களில் நடைமுறை அல்லாத சொத்துக்களான ரூபா 1,888,580 குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | சரியான பெறுமதி கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் திருத்தப்படும். |
| (ii) | சபையின் நிதி மூலம் நிர்மாணிக்கப்பட்ட ரூபா 647,767 க்கான கட்டிடம் நிலையான சொத்தாகக் கணக்கிலிடப்படவில்லை. | கணக்கில் நிலையான சொத்தாகக் காட்டப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டில் திருத்தப்படும். |
| (iii) | பொது வைப்புக் கணக்கில் இல்லாத ரூபா 262,170 வைப்பிலிடப்பட்ட 44 பேருக்குத் திருப்பிச் செலுத்தப்படும் போது பொது வைப்புக் கணக்கில் வரவு வைக்கப்பட்டதால் மீளாய்வாண்டின் டிசம்பர் 31 இல் உள்ளவாறு பொது வைப்புக் கணக்கு மீதி ரூபா 262,170 குறைந்திருந்தது. | சரியான கணக்கிலிடப்பட வேண்டும். | நாட்குறிப்பு 52 மூலம் திருத்தப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (iv) | ஏல விற்பனையின் போது வசதிகளுக்கென சபைக்கு வழங்கப்பட்ட 01 ஏக்கர், 01 றூட், 29.29 பர்ச்சர்ஸ் காணி மற்றும் 05 டிறக்டர்கள், 07 டிறயிலர்கள் என்பவற்றின் பெறுமதி உறுதி செய்யப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை. | பெறுமதியைக் கணித்து சொத்துக் கணக்கிலிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் கணக்குகளில் குறிப்பிடப்படும். |
| (v) | பெற வேண்டிய மீதியில் 1-3 ஆண்டுகளுக்குரிய ரூபா 11,609,387, 3-5 ஆண்டுகளுக்குரிய ரூபா 1,487,049 மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியில் 1-3 ஆண்டுகளுக்குரிய ரூபா 27,290,249 என்பன இருந்தன. | பெற வேண்டிய மீதியை அறவிடவும் கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதியைத் தீர்வு செய்ய வேண்டும். | பதிவேடுகளில் மீதிகளைப் பார்த்து எதிர்காலத்தில் தீர்வு செய்யப்படும். |
| (vi) | 2018 டிசம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் உள்ள 08 கணக்கீட்டு மீதிகளுக்கும் துணைப் பதிவேடுகளுக்குமிடையே ரூபா 4,747,563 வித்தியாசமிருந்தது. | மீதிகளது வித்தியாசம் இணக்கம் செய்யப்பட்டு திருத்தம் செய்யப்பட வேண்டும். | இவ்வேறுபாடுகள் மிக விரைவாக பரிசீலிக்கப்பட்டு திருத்தப்படும். |

## 1.4 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 571(2) ஆம் நிதிப் பிரமாணம் | 9,012,220 | காலங்கடந்த வைப்புகளது அரையாண்டு நிரல் தயாரிக்கப் படவில்லை. | நிதிப் பிரமாணத்தின் படி நடக்க வேண்டும். | 2019 அரையாண்டு நிரல் தயாரிக்கப் பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 83,695,147 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 66,591,252 ஆகும்.

## 2.2 நிதிக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் நிதி பொதுமக்களின் நலனுக்காகப் பயன்படுத்தப்பட வேண்டுமாயினும், ரூபா 22,848,604 தேசிய சேமிப்பு வங்கியில் 06 நிலையான வைப்புக்களிலும் ரூபா 11,758,743 மக்கள் வங்கியிலும் முதலீடு செய்யப்பட்டிருந்தன. | அங்கீகாரம் பெற்றே முதலீடு செய்யப்பட வேண்டும். | முதிர்வு அடைந்ததன் பின்னர் பிரதேச அபிவிருத்திக்குப் பயன்படுத்தப்படும். |

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 18,539,500 | 18,600,577 | 17,198,554 | 36,354,071 | 18,543,690 | 18,399,205 | 19,627,496 | 35,364,629 |
| (ii) | வாடகை | 9,629,200 | 8,055,013 | 9,255,499 | 3,289,138 | 10,335,518 | 8,204,817 | 9,737,221 | 3,694,348 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,351,000 | 770,490 | 1,267,717 | 1,000 | 1,284,475 | 525,550 | 1,031,573 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 92,750,600 | - | 2,838,900 | - | 86,685,000 | - | 8,854,423 | - |

### 2.3.2 வருவாய் சேகரிப்பு செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வருவாயைச் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பாக மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 122 மில்லியனாகும். பட்டியலிடப்பட்டது ரூபா 27 மில்லியனும் சேகரிக்கப்பட்டது ரூபா 19 மில்லியனாகும். வருடாந்த மதிப்பீட்டின் படி இது 15.5 சதவீதமாகும். | திட்டப்படி வருவாய் சேகரிக்கப்பட வேண்டும். | இந்த ஆண்டிலிருந்து வருவாய் சேகரிப்பது அதிகரிக்கப்படும். |

### 2.3.3 தீர்வையும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நடப்பாண்டில் பட்டியலிடப்பட்ட தீர்வை ரூபா 13.5 மில்லியனாகும். சேகரிக்கப்பட்டது ரூபா 6.6 மில்லியனாகும். நிலுவையான ரூபா 35.4 மீதியில் ரூபா 5.9 மில்லியன் ஆண்டின் போது அறவிடப்பட்டதால் முன்னேற்றம் 16 சதவீதமாக இருந்தது. | வருவாய் நிலுவை திறம்பட அறவிடப்பட வேண்டும். | குறிப்பிட்ட பெறுமதியிலும் கூடுதலாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | தீர்வைக்கான காலப்பகுப்பாய்வின் படி 2019 யூன் 30 ஆந் திகதியளவில் மீதி ரூபா 36,565,032 ஆகும். அதில் 5 - 10 ஆண்டுகளுக்குரிய ரூபா 7,391,481 மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 16,828,820 என்பனவாகும். | வருவாய் நிலுவை திறம்பட அறவிடப்பட வேண்டும். | 2019 யூன் 30 காலப்பகுப்பாய்வின் படி 5 - 10 ஆண்டுகளுக்கான நிலுவை ரூபா 7,391,481 ஆகும். 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதி ரூபா 16,828,819 ஆகும். |

### 2.3.4 கடை வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் நிலுவை ரூபா 2,559,182 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதில் 5 - 10 ஆண்டுகளுக்குரிய ரூபா 517,592 மற்றும் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 679,629 என்பன உள்ளன. | அறவிடப்பட வேண்டிய நிலுவை அறவிடப்பட வேண்டும். | பொதுச் சபையின் தீர்மானப்படி 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட மீதிகள் பதிவழிக்கப்பட வேண்டும். பெலிவேரியவின் 06 கடைகள் அகற்றப்பட்டதை விசாரிக்கப்படும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் படி 2 கடை உரிமையாளர் 2002 சனவரி முதல் 2007 ஆகஸ்ட் வரை ரூபா 784,000 நிலுவையைக் கொண்டிருந்தனர். 2018 யூன் 10 வரை இது அறவிடப்படவில்லை. | நெடுங்கால நிலுவை அறவிடப்பட வேண்டும். | தற்போது விசாரணை மேற்கொள்ளப் படுகின்றது. |

**2.3.5 ஏனைய வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொலைத்தொடர்பு கோபுரம்<br>(i) 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் V ஆம் பட்டோலையின் V ஆம் பிரிவின்படி கோபுரங்கள் இனங்காணப்பட்டு கட்டணம் அறவிடப்படவில்லை. | சகல கோபுரக் கட்டணங்களும் அறவிடப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்படும். |
| (ii) சபையின் ஹெனரத்கொடை உப அலுவலகத்தில் கோபுரங்கள் கணிக்கப்பட்டு வருவாய் அறவிடப்படவில்லை. | கணிப்பு மேற்கொண்டு அறவீடு செய்யப்பட வேண்டும். | தற்சமயம் ஹெனரத்கொடை உப அலுவலகத்திற்குரிய கோபுரங்கள் கணிக்கப்பட்டுள்ளன. கட்டணம் அறவிடப்படும். |

**2.3.6 சுற்றாடல் அனுமதிப்பத்திரக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ)** 2018 ஆம் ஆண்டில் வர்த்தக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்ட 110 நிறுவனங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவில்லை. | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வர்த்தக அனுமதிப்பத்திரம் போன்று சுற்றாடல் அனுமதிப்பத்திரமும் வழங்கப்படும். |
| (ஆ) சபை வழங்கிய 92 சுற்றாடல் அனுமதிப்பத்திரங்களில் 38 காலாவதியாகியிருந்தன. | சுற்றாடல் அனுமதிப்பத்திரத்தை பெறப்பட வேண்டும். | வர்த்தக அனுமதிப்பத்திரத்துடன் சுற்றாடல் பத்திரமும் வழங்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பணிகளுக்கு உப விதிகள் தயாரிக்கப்பட வேண்டும். 2018 டிசம்பர் 31 வரை 15 பணிகளுக்கே அவை ஆக்கப்பட்டு 15 பணிகளுக்கு அவை ஆக்கப்படாதிருந்தன. | நிறைவேற்ற வேண்டிய பணி செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டும். | எஞ்சிய உபவிதித் தயாரிப்பு நடைபெறும். |

## (ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்ட போதும், உப விதிகளின் படியான 15 பணிகள் அதில் உள்ளடக்கப்படவில்லை. | செயல் நடவடிக்கைத் திட்டப்படி நடக்க வேண்டும். | எதிர்வரும் காலத்தில் அப்பணிகளும் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படும். |

## (இ) பணிகளை நிறைவேற்றுவதில் தாமதம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நூலகக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு நடப்பாண்டில் ரூபா 75.5 மில்லியன் நிதியேற்பாடு இருந்தபோதும், ஆண்டின் போது திட்டம் மாத்திரமே தயாரிக்கப்பட்டிருந்தது. | தாமதமின்றிப் பணி நிறைவேற்றப்பட வேண்டும். | நூலகக் கட்டிட நிர்மாண வேலைக்கு உள்ளூர் கடன் நிதியத்திலிருந்து ரூபா 10,000,000 கடனாக் கோரப்பட்டிருந்தது. 2018 ஒக்டோபரில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் செயற்திட்டம் நடைபெறாது என அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது. |

**(ஈ) திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபை நாளாந்தம் 13 - 14 தொன் கழிவுகளைச் சேகரிக்கின்றது. கொம்போஸ்ட் உற்பத்தியில் கவனம் செலுத்தப்படவில்லை. | கொம்போஸ்ட் உர உற்பத்தியில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் புதினப் பத்திரிகை விளம்பர மூலம் பொருத்தமான காணி பெறப்படும். |
| (ii) | 2008 யூலை 30 ஆந் திகதிய 1560/06, 2008 பெப்ரவரி 01 ஆந் திகதிய 1534/18 மற்றும் 2011 யூலை 05 ஆந் திகதி 1713/11 இலக்க வர்த்தமானியின் பிரகாரம் கட்டணம் அறவிடப்படும். | கழிவுகளுக்காக வரி அல்லது கட்டணம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கட்டணம் அல்லது வரி அறவிடப்படும். |

**(உ) பொதுமக்களின் புகார்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நடப்பாண்டு முடிவில் 197 புகார்கள் கிடைக்கப் பெற்று 62 தீர்வு செய்யப்பட்டிருந்தன. 89 விசாரிக்கப்பட்டவாறுள்ளன. 46 நேரடிப் பரிசோதனைக்குள்ளாகும். | பொது மக்கள் புகார் விசாரிக்கப்பட வேண்டும். | தீர்வு செய்யப்படாதன விரைவில் தீர்வு செய்யப்படும். |

**(ஊ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்குகள் சம்பந்தமான 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் உலகளாவிய சுட்டுக்களின் ஊடாக பிரதேச சபை அதிகாரத்துக்குட்பட்ட பொது மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு நெடுங்காலத் திட்டம் 2018 ஆம் ஆண்டில் | நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கை அடைய வேண்டும். | 2018 ஆம் ஆண்டுக்கான நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி இலக்கு சம்பந்தமாக திட்டத்தை தயாரித்து சபைக்கு அறிவித்து 2019 ஆம் ஆண்டில் திட்டம் தயாரிக்கப்படும். |

| | | |
|---|---|---|
| தயாரிக்கப்படவில்லை. 2019 - 2023 க்கான நிலைத்து நிற்கவல்ல திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | | |

### 3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபை நடப்பாண்டில் சபைக் கட்டிடத்தின் நீர்க் கட்டணமாகச் செலுத்திய தொகை ரூபா 372,270 ஆகும். அதில் வாடகைக்கு வழங்கியிருந்த 36 கடைகளும் உள்ளடக்கும். கடைகளுக்கான நீர் அறவீட்டைப் பெறுவதில் சபை தவறியிருந்தது. | கடை உரிமையாளர் களுக்கு செலவினச் சுமை ஏற்படாதவாறு பார்க்க வேண்டும். | நீர் வழங்கல் சபையின் நீருக்கு தற்போது குத்தகையாளர் கட்டணம் செலுத்துகின்றனர். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் கலி பவுசர் சேவையைப் பெறுவதற்கு 2018 ஆம் ஆண்டில் 86 பேர் பதிவு செய்திருந்தனர். ஏறக்குறைய வாரத்திற்கு 03 நாட்கள் சேவையில் ஈடுபடின் ஆண்டொன்றில் 156 நாள் சுழற்சியில் ஈடுபடலாம். எனினும், 18 முதல் 51 நாள் தாமதம் நிலவியது. | அவசியமானதும மிக முக்கியமானதுமான இச்சேவையை திறம்பட நடத்த வேண்டும். | கலி பவுசர் வேலை செய்யாததால் அக்காலப்பகுதியின் போது பயன்படுத்தப்பட முடியவில்லை. |

### 3.4 சொத்து முகாமைத்துவம்

#### 3.4.1 சொத்துக்களைப் பதிவு செய்யாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஏல விற்பனைக் காணியில் 01 ஏக்கர், 01 றூட், 29.29 பர்ச்சர்ஸ் காணியின் 06 துண்டுகள் பதிவு | சபையின் சகல சொத்துக்களும் பதிவு | உரித்துறுதி 2468 பதிவு செய்யப்பட்டுள்ளது. பரிந்துரைகள் 5144 மற்றும் 336 |

| | | |
|---|---|---|
| செய்யப்படவில்லை. | செய்யப்பட வேண்டும். | தவிர ஏனையவற்றிற்கு 03 காணித துண்டுகளுக்கான உரித்துறுதி கிடையாது. பிரகடன உரித்துறுதி தயாரிக்கப்படும். |

**3.4.2 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருவாயைப் பெறாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெலிவேரிய பொதுச் சந்தை கீழ் மாடியில் 04 அறைகள் மற்றும் பிரசேத சபைக் கட்டிடத்தில் 04 கடைகள் என்பன 05 ஆண்டுகளுக்கு மேலாக எதிர்பார்த்த பயனின்றி இருந்தன. | சபையின் சொத்துக்கள் சிக்கனமாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். | வெலிவேரிய பொதுச் சந்தையில் கேள்வி சமர்ப்பிக்கப்படாத கடைகளுக்கு மூன்றாவது முறையாக பிரதேச வாரியாக கேள்வி பெறப்பட்டுள்ளது. |

**3.4.3 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி அமைச்சால் வழங்கப்பட்ட ரூபா 45,717,101 பெறுமதியான 5 வாகனங்கள், மத்திய சுற்றாடல் அதிகாரசபை வழங்கிய 06 வாகனங்கள் மற்றும் தலைமைச் செயலகத்தால் வழங்கப்பட்ட ரூபா 2,750,000 பெறுமதியான 02 வாகனங்கள் உள்ளடங்கலாக 13 வாகனங்கள் 2019 யூன் 10 ஆந் திகதியளவிலும் சுவீகரிக்கப்படாதிருந்தன. | வாகனத்தைச் சுவீகரிக்க வேண்டும். | மேற்படி வாகனங்களைச் சுவீகரிப்பதற்கு அந்நிறுவனங்களுடன் கடிதத் தொடர்பு மேற்கொள்ளப் பட்டுள்ளது. |

**3.4.4 வருடாந்த பொருள் / கையிருப்புக் கணிப்பு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கலஹிட்டியாவ பொதுசன நூலகத்தில் ரூபா 66,933 பெறுமதியான 460 புத்தகங்கள் மற்றும் செறனரக்கொடை பொதுசன நூலகத்தில் ரூபா 2,050 | பொறுப்பான உத்தியோகத்தர் களிடம் அறவிடப்பட வேண்டும். | புத்தகங்கள் உள்ளவாறு தொலைந்து போயினவா என உறுதி செய்யப்படும். |

பெறுமதியான 58 புத்தகங்கள் என்பன தொலைந்திருந்தன.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நடப்பாண்டில் ரூபா 500,250 செலவில் கத்துறுவத்தை முன் கலவைப் பிரிவில் பாதுகாப்பு கெமரா அமைக்கப்பட்டிருந்தது. கண்காணிப்பை வசதியாக்கி நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துதல் அதன் நோக்கமாகும். அதன் தன்னியக்க சக்தி ஒரு வாரம் ஆகையால் அவசியமானவற்றை அவதானித்துக் களஞ்சியப்படுத்த முடியவில்லை. ஆகவே நோக்கம் நிறைவேறாமை அவதானிக்கப்பட்டது. | சிக்கனமாகவும் ஆக்கபூர்வமாகவும் செலவிடப்பட வேண்டும். | இந்த இடத்தில் தொலைபேசி வசதிகள் இல்லை. பெறப்பட்டதும் கெமரா முறைமையை கையடக்கத் தொலைபேசி மூலமாக அவதானிக்கலாம். பெருமளவு பெறுமதியான வாகனங்களும் இயந்திரங்களும் இங்குள்ளதால் ஏற்படக்கூடிய விபத்து தவிர்க்கப்படும். |

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அங்கீகாரமின்றி ரூபா 2,278,484 பெறுமதியான 116 வைப்பு மீதிகள் கணக்கில் பதிவழிக்கப்பட்டிருந்தன. | அதிகாரம் பெறப்பட்டு பதிவழிக்கப்பட வேண்டும். | பின்னர் கண்டுபிடிக்கப்பட்ட பட்டோலையுடன் கூடிய ரூபா 2,278,484 மீண்டும் 55 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் வைப்புக் கணக்கிலிடப்பட்டுள்ளது. |

### 3.7 பொருட் கொள்வனவு

#### 3.7.1 பொருட் கொள்வனவுத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நடப்பாண்டின் பொருட் கொள்வனவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ரூபா 4,539,000 கொள்வனவுகள் ஆண்டின் போது நடைபெறவில்லை. | பொருட் கொள்வனவுத் திட்டத்துக்கு ஏற்ப கொள்வனவு செய்ய வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் 2 கை வண்டிகளைப் பெற சபை திட்டமிட்டதுடன் ஆயுர்வேத மருந்துகளையும் களஞ்சியப் பொருட்களையும் பெற கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |

### 3.7.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2018 ஆம் ஆண்டில் சபைக்கென அங்கீகரிக்கப்பட்ட 497 வரவு செலவு திட்டங்களில் 116 ஆம் கம்பெரலிய செயற்திட்டங்கள் 2019 யூன் 10 வரை ஆரம்பித்திருக்கவில்லை. | தேவையான அங்கீகாரத்துடன் செயற்திட்டம் முடிவடைய வேண்டும். | கம்பெரலிய செயற்திட்டங்கள் 216 ஆகும். இவை 2018 ஒக்டோபர் 19 ஆந் திகதியளவில் பெறப்பட்டுள்ளன. அங்கீகாரம் இல்லாததால் ஆரம்பிக்கப்படவில்லை. |